# India-China meeting of Army Commanders on June 06, 2020

07 June, 2020

---

## செய்தி வெளியீடு: 2020 ஜூன் 6 அன்று இந்தியா- சீனா இராணுவத் தளபதிகளின் கூட்டம்

ஜூன் 07, 2020

சமீபத்திய வாரங்களில்,இந்தியா-சீனா எல்லையில் உள்ள பகுதிகளின் நிலைமையை நிவர்த்தி செய்வதற்காக இந்தியாவும் சீனாவும் நிறுவப்பட்ட இராஜதந்திர மற்றும் இராணுவ சேனல்கள் மூலம் தகவல் தொடர்புகளைப் பராமரித்து வருகின்றன.

லேவைத் தளமாகக் கொண்ட கார்ப்ஸ் கமாண்டர் மற்றும் சீனத் தளபதி இடையே 2020 ஜூன் 6 அன்று சுஷூல்-மோல்டோ பிராந்தியத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இது ஒரு நல்ல மற்றும் நேர்மறையான சூழ்நிலையில் நடந்தது. இருதரப்பு உறவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இந்தியா-சீனா எல்லைப் பிராந்தியங்களில் அமைதியும் சுமூகமும் அவசியம் என்ற தலைவர்களுக்கு இடையிலான உடன்பாட்டைக் கருத்தில் கொண்டு பல்வேறு இருதரப்பு ஒப்பந்தங்களின்படி எல்லைப் பகுதியின் நிலைமையை அமைதியாக தீர்க்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இரு நாடுகளுக்கிடையில் இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 70 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த ஆண்டு இரு தரப்பினரும்  அதனைக் குறிப்பிட்டனர். மேலும் ஆரம்ப கால தீர்மானம் உறவின் வளர்ச்சிக்கு மேலும் பங்களிக்கும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அதன்படி, இரு தரப்பினரும் நிலமையை தீர்ப்பதற்கும், எல்லைப் பகுதிகளில் அமைதி மற்றும் சுமூகத்தை உறுதி செய்வதற்கும் மற்றும் இராணுவ மற்றும் இராஜதந்திர நடவடிக்கைகளைத் தொடரும்.

நியூ டெல்லி

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.